**அக்குரஸ்ஸ பிரதேச சபை**
**மாத்தறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 29 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 28 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து அக்குரஸ்ஸ பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) பழைய சபைக் கட்டிடத்தின் பெறுமதியாகிய ரூபா 386,800 தொகையினை கணக்குகளில் இருந்து அகற்றும் போது அமைந்திருந்த காணியின் பெறுமதியினையும் நிலையான சொத்துக்களில் இருந்து அகற்றப்பட்டிருந்தது.

(ஆ) புரநெகும செயற்திட்டத்தின் கீழ் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த கட்டிடத்தின் ரூபா 33,961,279 தொகைக்கான கிரயப் பெறுமதியை கணக்கீடு செய்யப்படாமல் ரூபா 34,039,605 தொகையான ஒப்பந்தப் பெறுமதியை கணக்கீடு செய்திருந்தது.

(இ) முன்னைய ஆண்டு தொடர்பாக பெற வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 4,342,204 தொகை மற்றும் நிலையான வைப்புக்களின் பெறுமதி ரூபா 612,500 தொகை குறைவாகக் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறு உள்ளூராட்சி ஓய்வூதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 5,037,907 இற்கான பங்களிப்புத் தொகை கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(உ) சபைக்குச் சொந்தமான 27 காணித் துண்டுகளின் பெறுமதியினை கணக்கிட்டு மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களிலுள்ள கூட்டுத்தொகை ரூபா 29,562,465 தொகைக்கான 11 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே கூட்டுத்தொகை ரூபா 4,592,467 தொகைக்கான ஒப்பற்ற தன்மை அவதானிக்கப்பட்டது.

**1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 14,044,165 தொகைக்கான மூலதன உதவிக் கடன்பட்டோர் மீதியில், 03 வருட காலத்தை மிகைத்துள்ள ரூபா 2,314,236 இற்கான மீதிகள் அடங்கியிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 16,048,407 தொகைக்கான கடன்கொடுத்தோர் மீதியில் 03 வருட காலத்தை மிகைத்திருந்த ரூபா 3,205,760 தொகைக்கான மீதிகளும் அடங்கியிருந்தன.

(இ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 4,937,784 தொகையான வைப்பு மீதிகளில் 03 வருட காலத்தை மிகைத்திருந்த ரூபா 2,917,670 இற்கான மீதிகள் அடங்கியிருந்தன.

(ஈ) கடந்த ஆண்டிற்கு முன்னர் இருந்து தீர்க்கப்படாமல் முன்கொண்டு வந்து காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 760,510 தொகைக்கான அத்துரலிய பிரதேச சபை கடன்பட்டோர் மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

---

கூட்டுத்தொகை ரூபா 70,655,848 தொகைக்கான நிலையான சொத்துக்கள் மற்றும் கூட்டுத்தொகை ரூபா 14,525,058 தொகைக்கான நிர்மாண வேலை கடன்கொடுத்தோர் மீதி தொடர்பாக நாளது வரை ஆக்கப்பட்ட விரிவான அட்டவணைகள், ரூபா 3,420,166 தொகைக்கான களஞ்சிய இருப்பு மீதி தொடர்பாக இருப்புக் கணிப்பீட்டு அறிக்கை மற்றும் கூட்டுத்தொகை ரூபா 4,351,529 தொகைக்கான 06 வகையான வைப்புக்கள் தொடர்பாக விரிவான அட்டவணை ஆகிய சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியாதுள்ளது.

**1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்**

---

இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை 570 மற்றும் 571 இன் பிரகாரம் கூட்டுப்பெறுமதி ரூபா 2,406,380 தொகையான காலங்கடந்துள்ள 06 வைப்பு மீதகிள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2. நிதி மீளாய்வு**

---

**2.1 நிதி விளைவுகள்**

---

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 17,834,074 ஆகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 8,752,279 ஆகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 9,081,795 இற்கான வளர்ச்சி ஒன்றினைக் காட்டியது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் வருமானத்தின் 72 சதவீத அளவில் மொத்த மீண்டுவரும் செலவுகள் காணப்பட்டது.

(ஆ) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது மீண்டுவரும் செலவுகளில் குறைவடைதல் ஒன்றினைக் காட்டியது. சுயமாக உருவாக்கிய வருமானத்தை மிகைத்து மீளாய்வாண்டைப் போலவே கடந்த இரண்டு வருடங்களிலும் கணிசமான பெறுமதிகளில் மீண்டுவரும் செலவு காணப்பட்டதுடன் சபையினால் சுயமாக உருவாக்கிய மீண்டுவரும் செலவுகளை மேவகை செய்வதற்காக எவ்விதத்திலும் இயலாத ஒரு நிலைமை ஒன்றினைக் காட்டியது.

### 2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

மீளாய்வாண்டின் போது நடைமுறை மற்றும் விரைவு விகிதாசாரங்களில் 1:3 எனக் காட்டப்பட்டிருந்த போதிலும், கடன்பட்டோர் மீதியில் 03 வருட காலத்தை மிகைத்துள்ள அறவிடப்படாமல் காணப்பட்ட ரூபா 2,314,236 இற்கான மீதிகள் காணப்படுகின்றமையால் அவ் விகிதாசாரங்களின் பிரகாரம் திரவத்தன்மை நிலைமை காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 2.4 வருமான நிருவாகம்

#### 2.4.1 வீதவரி மற்றும் வரி

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) வீதவரி**

ஆரம்ப நிலுவை மீதி ரூபா 1,520,917 தொகை ஆகக் காணப்பட்டதுடன், ரூபா 2,162,763 இற்கான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 3,683,680 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. மொத்த அறவீடுகள் ரூபா 2,484,596 தொகையாகக் காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 1,199,084 தொகை நிலுவையாகக் காணப்பட்டது.

**(ஆ) ஏக்கர் வரி**

ஆரம்ப நிலுவை மீதி ரூபா 43,955 தொகையாகக் காணப்பட்டதுடன், ஆண்டிற்கான சிட்டையிடப்பட்டிருக்கவில்லை. அறவீடுகள் ரூபா 1,075 தொகையாகக் காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 42,880 தொகை நிலுவையாக காணப்பட்டது.

#### 2.4.2 வாடகை

ஆரம்ப நிலுவை மீதி ரூபா 5,222,407 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 5,965,225 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 11,187,632 தொகை அறவிடப்பட வேண்டியக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 5,485,224 தொகையாகக் காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு நிலுவை மீதி ரூபா 5,702,408 தொகையாகும்.

### 2.4.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளினால் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணமாக ரூபா 2,569,394 தொகை மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 14,503,308 தொகை கிடைக்க வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபை நிதியத்தில் இருந்து மற்றும் மூலதன உதவிகளின் மூலம் பாதீடு செய்யப்பட்டிருந்த ரூபா 40,000,000 தொகைக்கான 82 நிர்மாண வேலைகளில் ஒரு நிர்மாண வேலையேனும் மீளாய்வாண்டின் போது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பாதீட்டின் மூலம் அங்கீகரித்திருக்காத 02 நிர்மாண வேலைகளை மேற்கொள்வதற்கு 2016 திசெம்பர் 27 திகதி ஒப்பந்தக்காரர்களுடன் ரூபா 4,099,975 இற்கான மதிப்பீட்டுப் பெறுமதிகளுக்கு உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டிருந்த போதிலும் அந்த 2 நிர்மாண வேலைகளும் 2017 ஜூன் 25 ஆம் திகதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

### 3.2.1 மனித வள முகாமைத்துவம்

ஆட்சேர்ப்புத் திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டிருந்த இரண்டாம் தர மட்டத்திலான 02 பதவிகள் மற்றும் ஆரம்ப தர மட்டத்திலான 04 பதவிகளில் காணப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்காகவும் மற்றும் 04 பதவிகளில் காணப்பட்ட 05 மிகை பதவிகள் முறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.2.2 பதவியணிக் கடன்

சேவையை விட்டுச் சென்றுள்ள மற்றும் ஓய்வு பெற்றுள்ள 19 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 830,507 இற்கான பதவியணிக் கடன் மீதியினை மீளாய்வாண்டு இறுதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. அவற்றில் ரூபா 52,581 தொகைக்கான மீதி 05 வருடங்களை விட மிகையான காலம் கடந்திருந்தது.

## 4. செயற்பாட்டுத் திறமையின்மை

சபைக்கு அண்மையில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடமொன்றில் மலசல வடிகால் முறைமை ஆற்று ஓரத்தில் தயாரிக்கப்பட்டு இருந்ததெனவும் நிர்மாணவேலை அங்கீகாரம் இன்றி நடைபெற்றுள்ளதெனவும் அறிந்திருந்த போதிலும் இது தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 4.1 விளைவற்ற/ குறைவாகப் பயன்படுத்தபடும் சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான கூட்டுப்பெறுமதி ரூபா 2,163,996 தொகைக்கான 05 ஏக்கர் 03 ரூட் 11 பர்சஸ் கொண்ட 16 காணித் துண்டுகளைப் பயன்படுத்தியிருக்கவில்லை.

அத்துடன் அக் காணிகளில் எல்லைகளை அடையாளமிட்டு காணிகளின் பாதுகாப்பிற்காக தேவையான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2015 ஆண்டின் போது சபைக்குக் கிடைத்திருந்த ரூபா 24,928,666 கிரயத்தையுடைய மோட்டார் கிரேடர் இயந்திரம் அத்திகதி முதல் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டதுடன் சபைக்குச் சொந்தமான 02 டபள் கப் வண்டிகள், டிபர் வண்டி ஒன்று, முச்சக்கரவண்டி ஒன்று மற்றும் கை டிரக்டர் வண்டி ஒன்று மற்றும் 02 டிரக்டர் வண்டிகள் என்பன குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது.

## 4.2 திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.
2016 ஆண்டின் போது குப்பை முகாமைத்துவத்திற்காக ரூபா 7,120,916 இற்கான செலவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், சேகரிக்கப்பட்டிருந்த சுமார் 27,648 தொன் குப்பைகள் நகர மத்தியில் அமைந்துள்ள காணியொன்றிற்கு அகற்றப்பட்டிருந்தது. குப்பை வரி அறவீடு செய்வதற்கு 2002 ஆண்டு முதல் துணை விதிகள் ஆக்கப்பட்டிருந்த போதிலும் குப்பை வரி அறவீடு செய்திருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டிலுள்ள 08 செலவு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 19,375,886 தொகைக்கான சேமிப்புக்களும் 03 வருமான விடயங்களில் நெருங்கியிருக்காத இலக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 14,407,062 தொகையும் காணப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(இ) வருமான நிருவாகம்
(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு